# அரசு மருத்துவக் கல்லூரி அரியலூர்

## உடற்கூறியல் துறை

**முழு உடல் தானம் வழங்குபவர்** மற்றும் **நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிகுறிப்புகள்** மற்றும் **விதிமுறைகள்.**

1. **முழுஉடல் தானம் செய்ய விரும்புவோர்கள் பதிவு செய்ய வரும் போது எடுத்து வரவேண்டிய ஆவணங்கள்**
   1. ஆதார் அட்டை நகல் அல்லது குடும்ப அட்டை நகல்
   2. பாஸ்போர்ட் அளவு போட்டோ -4
   3. இறந்தபின் உடலை ஒப்படைக்கபோகும் உறவினர் இருவரின் அடையாள அட்டை நகல் மற்றும் புகைப்படம்.
2. **முழுஉடல் தானம் வழங்குபவர் மரணமடைந்த பின்னர் அவருடைய உடலை 6 மணி நேரத்திற்குள் இந்த மருத்துவ கல்லூரியின் உடற்கூறியல் துறைக்கு காலை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.**
3. **இந்த நேரத்தில் அல்லாத நேரத்தில் இறந்தாலோ அல்லது விடுமுறை நாட்களில் இறந்தாலோ அரசு மருத்துவமனையின் இருப்பிட அதிகாரியிடம் உடலை ஒப்படைக்க வேண்டும். மருத்துவமனையின் பிணவரையில் வைக்கப்பட்டு அதன் பின்னர் இத்துறையால் பெற்றுக்கொள்ளப்படும்**
4. **முழு உடல் தானம் ஏற்க முடியாமைக்கு சில முக்கிய காரணங்கள் :**
   1. மருத்துவ சட்ட சார் பிரச்சனைகள் [ பிரேத பரிசோதனை செய்த உடல், அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் மரணம், தற்கொலை, விஷம் அருந்தியதால் ஏற்பட்ட மரணம்]
   2. தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருதால் [ HIV, TB, மஞ்சள் காமாலை etc...]
      சில மருத்துவநிலைகளால் உடலில் குறிப்பிடதக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால்
      [ ஊனம், உடல்உறுப்பு அகற்றப்படுதல், படுக்கை புண் ]
   3. இறந்த உடலை ஆராய்ந்த பின் உடல் தானத்தை குறித்து மருத்துவர் எடுக்கும் முடிவே இறுதியானது.
5. **இறந்தவர்களின் உடலை ஒப்படைக்கும் போது இறந்தவரின் வாரிசுகளோ அல்லது குடும்ப உறுப்பினர்களோ கட்டாயம் வரவேண்டும்.**
6. **மரணமடைந்தவரின் உடலை ஒப்படைக்க வருபவர்கள் கட்டாயம் கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**
   1. பதிவு பெற்ற மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட இறப்பு சான்று
   2. முழுஉடல் தான பதிவு அட்டை
   3. உடலை ஒப்படைக்க வரும் குடும்ப நபரின் ஆதார் அட்டை நகல் [ அல்லது ] குடும்ப அட்டை நகல்

## முழு உடல் தானம் செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**துறைத்தலைவர், உடற்கூறியல் துறை**
அரசு மருத்துவக் கல்லூரி
மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகில், செந்துறை ரோடு, அரியலூர்.

**இறந்தவர்களின் உடல் தான்... மருத்துவ மாணவர்களின் ஆசான்...**

ஆதலால் **உடல் தானம் செய்வீர்**

மேலும் விபரங்களுக்கு...
**04329-299337, செல் : 9443446001, 93858 32554**

## உடல்தானம் வழங்க முன் வருபவர்களிடமிருந்து பெறப்படும் விருப்பக் கடிதம்

அனுப்புதல்

____________________.
____________________.
____________________,
____________________,
____________________.

பெறுதல்
முதல்வர்,
அரசு மருத்துவக் கல்லூரி,
அரியலூர்.

ஐயா,

பொருள்: இறந்தபின் உடல்தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தல் தொடர்பாக

________________________________________ பகுதியில் வசித்து வருகின்ற________வயதுடைய நான் என் இறப்பிற்குப் பின்னர் என் உடலை அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி நோக்கத்திற்காக அரியலூர் மருத்துவக் கல்லூரிக்கு நானே முன் வந்து தானமளிக்க விரும்புகிறேன்.

இந்த உடல் தானமானது, என்னுடைய சொந்த விருப்பத்தினால் மட்டுமேயன்றி, இதில் யாதொரு கட்டாயமும் இல்லை என்று உறுதியளிக்கிறேன். நான் தெளிந்த மனதுடனும் செயல்பாட்டுடனும் இருக்கிறேன் என்று உறுதியளிக்கிறேன்.

எனக்கு ஹெப்படைடிஸ் / எச்.ஐ.வி / அல்லது யாதொரு ஏனைய தொற்று நோய்களுமில்லை என்று உறுதியளிக்கிறேன்.

நான் எனது கண்களை (இறப்பிற்கு பின்) தானமளித்துள்ளேன்/தானமளிக்கவில்லை.

மேற்கொண்டு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி விவரங்களைஅறியவும் அதன்படி உண்மையாக நடக்கவும் நான் விரும்புகிறேன்.

தேவையான நடைமுறைகளை நான் நிறைவு செய்வதற்கு ஏதுவாக, தேவையான படிவங்கள் வழங்குமாறு நான் உங்களிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுடன்

## உடல்தானம் வழங்குபவர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்

1. உடல்தானம் வழங்குபவர் இறந்த பின்னர், அவருடைய உடலைக் காலம் கடத்தாமல் (8 முதல் 24 மணி நேரத்திற்குள்) உடல்தானம் வழங்குவதற்காகப் பதிவு செய்துள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
2. உடலை, பயிற்றுவிக்கும் மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு செல்வதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும் வகையில் உடல்தானம் வழங்குபவர் இறந்த தகவலை அருகிலுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவக் கல்லூரி முதல்வர்/இருப்பிட மருத்துவ அதிகாரிக்குத் தெரிவிக்குமாறு, சட்டப்படிக்கானவாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்கள் கேட்டுக் கொள்ளப்படலாம்.
3. இறப்பு ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் இறப்பு ஏற்பட்ட நேரத்தை தெளிவாகக் குறிப்பிடுகின்ற வகையில் தகுதி வாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்ட **இறப்புச் சான்றிதழ்** மேற்சொன்ன உடலுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்படவேண்டும்.
4. உடல்கூறு இயல் துறையில் அனைத்து வேலைநாள்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 3.30 மணிவரையில் உடல் பெற்றுக் கொள்ளப்படும். பணிநேரம் அல்லாத பிற நேரங்களிலும் விடுமுறை நாள்களிலும் இருப்பிட மருத்துவ அதிகாரியிடம் கேட்டுக் கொள்வதன் பேரில் மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்படும்.
5. இறப்பு இயற்கையான முறையில் அல்லது இயற்கையில் ஏற்படுகிற நோயினால் ஏற்பட்டிருக்க வேண்டும்.
6. மருத்துவம் சார்ந்த சட்டப் பிரச்சனைகள், தற்கொலை, நஞ்சுஅருந்தியதால் ஏற்பட்ட இறப்பு ஆகிய நேர்வுகளில் உடல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.